ரிலையன்ஸ் இயக்குநர்களாக முகேஷ் அம்பானியின் வாரிசுகள்

இயக்குநர் குழுவிலிருந்து மனைவி விலகல்



ஆகாஷ் | இஷா | அனந்த்

மும்பை, ஆக. 28: நாட்டின் மிகப்பெரிய தொழில் நிறுவனமான ரிலையன்ஸ் இண்டஸ்ட்ரீஸ் நிறுவனத்தின் இயக்குநர்களாக தன் மகள் இஷா, மகன்கள் ஆகாஷ், அனந்த் ஆகியோரை முகேஷ் அம்பானி நியமித்துள்ளார்.

அவருடைய மனைவி நீதா அம்பானி இயக்குநர் குழுவிலிருந்து விலகியுள்ளார். இதன் மூலம் நிறுவனத்தின் நிர்வாகத்தை அடுத்த தலைமுறைக்கு அவர் மாற்றியுள்ளார். மூவருமே வெளிநாட்டுப் பல்கலைக்கழகங்களில் படித்தவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. எனினும், முகேஷ் அம்பானி அடுத்த 5 ஆண்டுகளுக்கு நிறுவனத் தலைவர் பொறுப்பில் தொடர இருக்கிறார்.

ரிலையன்ஸ் நிறுவனத்தின் ஆண்டு கூட்டத்தையொட்டி, நிர்வாகக் குழு கூட்டமும் நடைபெற்றது. இதில் முகேஷ் அம்பானியின் இரட்டைப் பிள்ளைகளான இஷா, ஆகாஷ் மற்றும் அனந்த் ஆகியோரை நிர்வாகக் குழுவில் இணைக்க முடிவு செய்யப்பட்டது.

இப்போது 66 வயதாகும் முகேஷ் அம்பானி, தன் 20-ஆவது வயதிலேயே தனது தந்தை திருபாய் அம்பானியின் ரிலையன்ஸ் நிறுவனத்தின் நிர்வாகக் குழுவில் இயக்குநர் பொறுப்பை ஏற்றார். ஆனால் அவர் தன் பிள்ளைகள் சுமார் 30 வயதை எட்டும் நிலையில்தான் முக்கிப் பொறுப்புகளை வழங்கியுள்ளார்.

முகேஷ் அம்பானியின் மனைவி நீதா அம்பானி இயக்குநர் குழுவில் இருந்து விலகியுள்ளார். அவர் நிறுவனத்தின் அறக்கட்டளைப் பிரிவை வலுப்படுத்தி நிர்வகிக்க இருக்கிறார். எனினும் இயக்குநர்கள் குழுவின் நிரந்தர அழைப்பாளராக அவர் இருப்பார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

எண்ணெய் - எரிவாயு, பெட்ரோகெமிக்கல், தொலைத்தொடர்பு சேவை, சில்லறை வர்த்தகம் உள்ளிட்ட பல்வேறு துறைகளில் ரிலையன்ஸ் கோலோச்சி வருகிறது. அண்மையில் நிதிச் சேவைகள் பிரிவும் தொடங்கப்பட்டுள்ளது.

விமானப் பயணத்தில் 2 வயது குழந்தைக்கு சுவாசக் கோளாறு: நடுவானில் உயிர் காத்த எய்ம்ஸ், ஐஎல்பிஎஸ் மருத்துவர்கள்!

மத்திய சுகாதார அமைச்சர் பாராட்டு

புது தில்லி, ஆக. 28: பெங்களூரிலிருந்து தில்லி செல்லும் விஸ்டாரா விமானம் புறப்பட்ட சிறிது நேரத்தில் சுவாசக் கோளாறு ஏற்பட்ட 2 வயது பெண் குழந்தைக்கு, அதே விமானத்தில் பயணித்த 5 மருத்துவர்கள் நடுவானிலேயே முதலுதவி சிகிச்சையளித்து உயிரைக் காப்பாற்றினர்.

பெங்களூரிலிருந்து 'விஸ்டாரா' பயணிகள் விமானம் கடந்த ஞாயிற்றுக்கிழமை இரவு 9 மணியளவில் புறப்பட்ட 30 நிமிஷத்தில், அந்த விமானத்தில் பயணித்த 2 வயது பெண் குழந்தைக்கு நடுவானில் சுவாசக் கோளாறு ஏற்பட்டது. இதையடுத்து, பிறவியிலேயே இதய நோயால் பாதிக்கப்பட்ட அக்குழந்தையின் சுவாசம் நின்றுவிட்டது.

இதைத் தொடர்ந்து, விமான நிலைய கட்டுப்பாட்டு அறைக்குத் தகவல் தெரிவிக்கப்பட்டதுடன், பயணிகளிடையே விமானப் பணியாளர்களால் அவசர கால அழைப்பு விடுக்கப்பட்டது.

அதிருஷ்டவசமாக, பெங்களூரில் நடந்த மருத்துவ மாநாட்டில் பங்கேற்றுவிட்டு அதே விமானத்தில் தில்லி திரும்பிக் கொண்டிருந்த எய்ம்ஸ் மருத்துவமனையைச் சேர்ந்த மயக்கவியல் மருத்துவர் நவ்தீப் கௌர், இதய கதிரியக்கவியல் துறை மருத்துவர்கள் தமன்தீப் சிங், அவிச்சலா தக்ஷக், மகப்பேறு மருத்துவர் ஒய்ஷிகா மற்றும் ஐஎல்பிஎஸ் மருத்துவமனையின் கதிரியக்கவியல் துறை மருத்துவர் ரிஷப் ஜெயின் ஆகிய 5 பேர் குழந்தைக்கு உதவ முன்வந்தனர்.

இவர்கள் நடுவானில் குழந்தைக்கு சிபிஆர் (இதயநுரையீரல் புத்துயிர்) சிகிச்சை அளித்தனர். தக்க நேரத்தில் மருத்துவர்கள் அளித்த முதலுதவி சிகிச்சையால் சுவாசம் மீட்டெடுக்கப்பட்டு குழந்தையின் உயிர் காப்பற்றப்பட்டது.

இதையடுத்து, நாகபுரி விமான நிலையத்தில் விமானம் அவசரமாகத் தரையிறக்கப்பட்டது. அங்கு ஆம்புலன்ஸுடன் தயார் நிலையில் இருந்த குழந்தைகள் நல மருத்துவர் வசம் குழந்தை அடுத்தகட்ட சிகிச்சைக்காக ஒப்படைக்கப்பட்டது.

விமானப் பயணத்தின் இடையே நடுவானில் குழந்தைக்கு முதலுதவி சிகிச்சை அளித்து உயிர் காத்த மருத்துவர்கள்.

இச்சம்பவம் குறித்து குழந்தைக்கு சிகிச்சையளித்த மருத்துவர்கள் கூறுகையில், 'கடந்த 3 வாரங்களுக்கு முன், குழந்தைக்கு இதய அறுவைச் சிகிச்சை நடந்துள்ளது. குழந்தையின் நிலை குறித்து விமானப் பணியாளர்களிடமிருந்து தகவலறிந்து சிகிச்சை அளிக்க விரைந்தோம். நாங்கள் பரிசோதிக்கத் தொடங்கியபோது குழந்தைக்கு நாடித் துடிப்பு இல்லை.

அதீத குளிர்ச்சியால் விரைத்துப் போயிருந்த குழந்தை மூச்சுவிடுவதை நிறுத்தியிருந்தது. எனவே, நடுவானில் சிபிஆர் சிகிச்சை தொடங்கப்பட்டது. ஊசிசெலுத்த ஏதுவாக ஐ.வி.யை உடனடியாகப் போட்டு, அதில் அவசர உயிர் காப்பு மருந்து ஏற்றப்பட்டது. இதனிடையே, குழந்தைக்கு மாரடைப்பு ஏற்படவே, மேலும் சிக்கல் அதிகரித்தது. ஏஇடி கருவி மூலம் இறுதியாக குழந்தைக்குத் தன்னிச்சையான சுவாச சுழற்சி திரும்பச் செய்து, குழந்தையின் உயிர் காப்பாற்றப்பட்டது' என்றனர்.

சுகாதார அமைச்சர் பாராட்டு: குழந்தையின் உயிர் காத்த மருத்துவர்களைப் பாராட்டி அமைச்சர் மன்சுக் மாண்டவியா வெளியிட்ட எக்ஸ் (ட்விட்டர்) பதிவில், 'விமானத்தில் குழந்தையின் விலைமதிப்பற்ற உயிரைக் காப்பாற்றியதற்காக மருத்துவர்கள் குழுவுக்குப் பாராட்டுகள். பூமியில் கடவுளுக்கு அடுத்தபடியாக மருத்துவர்கள் ஏன் மதிக்கப்படுகிறார்கள் என்பதற்கு உங்களின் ஊக்கமளிக்கும் செயல் எடுத்துக்காட்டாகத் திகழ்கிறது. குழந்தையின் ஆரோக்கியத்துக்கும், விரைவாக நலம் பெறவும் இறைவனை வேண்டுகிறேன்' என்று குறிப்பிட்டுள்ளார்.

அனைத்துத் தரப்புக்கும் நிதி சேவைகள்: 'ஜன்தன் திட்டம் புரட்சி'

புது தில்லி, ஆக.28: அனைத்துத் தரப்புக்கும் நிதி சேவைகள் கிடைப்பதில், பிரதமரின் ஜன் தன் திட்டம் புரட்சியை ஏற்படுத்தியுள்ளது என்று மத்திய நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் தெரிவித்துள்ளார்.

கடந்த 2014-ஆம் ஆண்டு ஆகஸ்ட் 28-ஆம் தேதி ஜன்தன் திட்டத்தை பிரதமர் மோடி தொடங்கிவைத்தார்.

அந்தத் திட்டம் தொடங்கப்பட்டு திங்கள்கிழமை 9 ஆண்டுகள் நிறைவடைந்ததையொட்டி, மத்திய நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் திங்கள்கிழமை வெளியிட்ட செய்தியில் தெரிவித்ததாவது:

நாட்டில் ஜன்தன் திட்ட வழிகாட்டுதலில் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் மற்றும் டிஜிட்டல் மாற்றம், அனைத்துத் தரப்புக்கும் நிதி சேவைகள் கிடைப்பதில் புரட்சியை ஏற்படுத்தியுள்ளது.

இந்தத் திட்டத்தின் கீழ் வங்கிக் கணக்குகளைத் திறந்ததன் மூலம், முறையான வங்கி அமைப்பின் கீழ் 50 கோடிக்கும் மேற்பட்டவர்கள் கொண்டுவரப்பட்டுள்ளது உற்சாகம் அளிக்கிறது.

இந்த வங்கிக் கணக்குகளில் சுமார் 55.5 சதவீதம் பெண்களுக்குச் சொந்தமானவை. 67 சதவீத வங்கிக் கணக்குகள் கிராமப்புற மற்றும் பகுதியளவு நகர்ப்புற பகுதிகளில் திறக்கப்பட்டுள்ளன.

ஜன்தன் கணக்குகளில் உள்ள மொத்த இருப்பு ரூ.2 லட்சம் கோடியைத் தாண்டியுள்ளது. அந்தக் கணக்குதாரர்களுக்கு ரூ.2 லட்சம் விபத்து காப்பீடு அடங்கிய சுமார் 34 கோடி ரூபே அட்டைகளும் கட்டணமின்றி வழங்கப்பட்டுள்ளது என்று தெரிவித்துள்ளார்.

பாகிஸ்தானுக்கு முதல் பெண் இந்திய தூதரக அதிகாரி நியமனம்

புது தில்லி, ஆக.28: பாகிஸ்தானுக்கான இந்திய தூதரக அதிகாரியாக வெளியுறவு துறை அமைச்சகத்தின் இணைச் செயலர் கீதிகா ஸ்ரீவாஸ்தவா திங்கள்கிழமை நியமிக்கப்பட்டார்.

பாகிஸ்தானில் உள்ள இந்திய தூதரகத்துக்கு பெண் ஒருவர் அதிகாரியாக நியமிக்கப்படுவது இதுவே முதல்முறையாகும்.

தற்போதைய இந்திய தூதரக அதிகாரி சுரேஷ் குமார் விரைவில் தாயகம் திரும்புவார் என்றும் இஸ்லாமாபாதில் கீதிகா ஸ்ரீவாஸ்தவா தனது பொறுப்புகளை விரைவில் ஏற்பார் என்றும் வெளியுறவு அமைச்சக அதிகாரி தெரிவித்தார்.

2005-பிரிவு இந்திய வெளியுறவு சேவை அதிகாரியான கீதிகா ஸ்ரீவாஸ்தவா, இந்திய வெளியுறவு அமைச்சகத்தில் இந்தோ-பசிபிக் பிரிவின் இணைச் செயலராக உள்ளார்.

2019-இல் ஜம்மு காஷ்மீரின் சிறப்பு அந்தஸ்து ரத்து செய்யப்பட்ட பின்னர் இரு நாடுகளும் தங்களின் தூதர்களைத் திரும்பப் பெற்று, அதிகாரிகள் அளவில் தூதரகங்களை நிர்வகித்து வருகின்றன.

ரூ.5 கோடி லஞ்சப் புகார்: அமலாக்கத் துறை உதவி இயக்குநர் மீது சிபிஐ வழக்கு

புது தில்லி, ஆக. 28: தில்லி கலால் கொள்கை முறைகேடு வழக்கிலிருந்து விடுவிக்க மதுபான தொழிலதிபர் அமன்தீப் தாலிடம் இருந்து ரூ. 5 கோடி லஞ்சம் பெற்றதாக அமலாக்கத் துறை உதவி இயக்குநர் பவன் கத்ரி மீது சிபிஐ வழக்குப்பதிவு செய்துள்ளது.

தில்லி கலால் கொள்கை முறைகேடு வழக்கு விசாரணையின்போது, வழக்கில் இடையூறு ஏற்படுத்த மூத்த அதிகாரிகளின் பெயரைப் பயன்படுத்தி துறையில் லஞ்சப் பரிமாற்றங்கள் நடைபெறுவதாகக் குற்றச்சாட்டு எழுந்தது.

இதுகுறித்து அமலாக்கத் துறை நடத்திய விசாரணையில், கலால் கொள்கை முறைகேடு வழக்கிலிருந்து தன்னை விடுவிக்க மதுபான தொழிலதிபர் அமன்தீப் தால், கடந்தாண்டு டிசம்பர் மாதம் முதல் ரூ.5 கோடி லஞ்சம் அளித்துள்ளது தெரிய வந்தது. கடந்த மார்ச் மாதத்தில் அமன்தீப் தால் கைது செய்யப்பட்டார்.

இதைத் தொடர்ந்து, குற்றஞ்சாட்டப்பட்டவர்களின் இடங்களில் கடந்த ஜூலை 4-ஆம் தேதி அமலாக்கத் துறை நடத்திய சோதனையில், ரூ. 2.19 கோடி ரொக்கமும், வழக்கின் முக்கிய ஆவணங்களும் கைப்பற்றப்பட்டன.

இந்நிலையில், அமலாக்கத் துறை அளித்த புகாரில் ஊழல் தடுப்புச் சட்டம் மற்றும் இந்திய தண்டனைச் சட்டத்தின் 120-பி (குற்றவியல் சதி) பிரிவின்கீழ் அமலாக்கத் துறை உதவி இயக்குநர் பவன் கத்ரி மீது சிபிஐ வழக்குப் பதிவு செய்துள்ளது.

மேலும், மதுபான தொழிலதிபர் அமன்தீப் தால், அவரது தந்தை பிரேந்தெர் பால் சிங், அலுவலக எழுத்தர் நிதீஷ் கோஹர், க்ளாரிட்ஜெஸ் ரிசார்ட்ஸ் சிஈஓ விக்ரமாதித்யா, பட்டயக் கணக்காளர் பிரவீண்குமார் வட்ஸ், ஏர் இந்தியா நிறுவனத்தின் உதவி பொது மேலாளர் தீபக் சங்வான் ஆகியோரும் இந்த வழக்கில் இணைக்கப்பட்டுள்ளனர்.

வழக்குப்பதிவைத் தொடர்ந்து குற்றஞ்சாட்டப்பட்டவர்களுக்குத் தொடர்புடைய 6 இடங்களில் சிபிஐ சோதனை நடத்தியது.

விமானத்துக்கு வெடி குண்டு மிரட்டல்: 4 மணி நேரம் தாமதம்

கொச்சி, ஆக.28: கொச்சியில் இருந்து பெங்களூருக்கு புறப்பட இருந்த இண்டிகோ விமானத்தில் வெடி குண்டு இருப்பதாக திங்கள்கிழமை தொலைபேசியில் மிரட்டல் அழைப்பு விடுக்கப்பட்டது.

இதையடுத்து, குழந்தை உள்பட 139 பயணிகளை விமானத்தில் இருந்து கீழே இறக்கி, விமானம் பயணிகள் உடைமைகள் முழுவதும் சோதனையிட்டதில் இது வெறும் புரளி என தெரியவந்ததாக விமான நிறுவனம் தெரிவித்தது.

வெடி குண்டு மிரட்டல் குறித்த தகவல் கிடைத்ததும் விமானத்தை பாதுகாப்பாக தனி இடத்துக்கு கொண்டு சென்று சிஐஎஸ்எஃப் அதிவிரைவுக் குழு, வெடி குண்டு செயலிழப்பு குழு, மாநில போலீஸார், விமானப் படை தீயணைப்பு குழு, விமான நிலைய பாதுகாப்பு குழு ஆகியவை சம்பவ இடத்துக்கு விரைந்து உடனடி நடவடிக்கையில் ஈடுபட்டு, வெடிகுண்டு மிரட்டல் போலி என உறுதி செய்தது.

இதனால் பெங்களூருக்கு திங்கள்கிழமை காலை 10.30 மணிக்குப் புறப்பட வேண்டிய விமானம் பிற்பகல் 2.24 மணிக்கு புறப்பட்டு சென்றது.

வெடிகுண்டு அழைப்பு இணையவழி மூலம் மேற்கொள்ளப்பட்டதால், இது குறித்து சைபர் போலீஸார் வழக்குப் பதிவு மிரட்டல் விடுத்த நபரை தேடி வருகின்றனர்.

ஹரியாணாவின் நூ பகுதியில் அமைதி

மாவட்ட நிர்வாகம் சார்பில் பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகள்

நூ, ஆக. 28: ஹரியாணாவின் நூ பகுதியில் வன்முறை ஏற்பட்டதையடுத்து, ஹிந்து அமைப்புகள் பேரணி நடத்த விருந்த நிலையில், மாவட்ட நிர்வாகம் மேற்கொண்ட பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகள் காரணமாக அப்பகுதியில் அமைதி நிலவியது.

ஹரியாணாவின் நூ பகுதியில் ஹிந்து-முஸ்லிம் அமைப்புகளிடையே கடந்த மாதம் 31-ஆம் தேதி வன்முறை மூண்டது. அதில் 6 பேர் உயிரிழந்தனர்.

அதையடுத்து, பிரிஜ் மண்டல யாத்திரையை நடத்துவதற்கு ஹிந்து பேரமைப்பு அழைப்புவிடுத்தது. அந்த யாத்திரையை திங்கள்கிழமை நடத்த அந்த அமைப்பு திட்டமிட்டிருந்தது. அதற்கு மாவட்ட நிர்வாகம் அனுமதி அளிக்காமல், நூ பகுதியில் 144 தடையுத்தரவை அமல்படுத்தியது.

பேரணி நடத்தாமல், மக்கள் தங்கள் வீடுகளுக்கு அருகில் உள்ள கோயில்களில் வழிபடுமாறு முதல்வர் மனோகர் லால் கட்டார் வலியுறுத்தியிருந்தார்.

எனினும், பேரணி திட்டமிட்டபடி நடைபெறும் என ஹிந்து அமைப்புகள் அறிவித்திருந்தன. முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக நூ பகுதியைச் சுற்றிலும் காவல் துறையினர் குவிக்கப்பட்டிருந்தனர்.

அதையடுத்து, துறவிகள், வலதுசாரி அமைப்புகளின் தலைவர்கள் என மொத்தமாக 15 பேரை மட்டும் பேரணியாகச் செல்ல காவல் துறையினர் அனுமதித்தனர்.

அவர்கள் நல்ஹார் பகுதியில் உள்ள சிவன் கோயிலில் வேழிபாடு செய்தனர். அதையடுத்து, ஃபிரோஸ்பூர் பகுதியில் உள்ள கோயிலிலும் அவர்கள் வழிபட்டனர். அவர்களுக்குக் காவல் துறையினர் சார்பில் பலத்த பாதுகாப்பு அளிக்கப்பட்டது.

முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக, நூ பகுதியை நோக்கிச் செல்லும் சாலைகள் அனைத்திலும் காவல் துறையினர் தடுப்புகள் அமைத்து சோதனை மேற்கொண்டனர். அந்தச் சாலைகளில் பல அடுக்கு சோதனைச் சாவடிகள் ஏற்படுத்தப்பட்டிருந்தன. உத்தர பிரதேசத்தின் அயோத்தி, தில்லி உள்ளிட்ட பகுதிகளில் இருந்து நூ பகுதிக்குச் செல்ல முயன்றவர்களைக் காவல் துறையினர் வழியிலேயே தடுத்து நிறுத்தினர்.

அதையடுத்து, அவர்கள் காவல் துறையினரின் சோதனைச் சாவடிக்கு அருகிலேயே உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டனர். ஹிந்து அமைப்புகளின் தலைவர்களை ஹரியாணா அரசு வீட்டுச் சிறையில் வைத்துள்ளதாக வலதுசாரி தலைவர் குல்பூஷண் பரத்வாஜ் குற்றஞ்சாட்டினார். அவரது வீட்டைச் சுற்றிலும் காவல் துறையினர் குவிக்கப்பட்டிருந்தனர்.

சோனாவில் இருந்து நூ வரையிலான பகுதிகள் முழுவதும் திங்கள்கிழமை வெறிச்சோடியே காணப்பட்டன. முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக அனைத்து கடைகளும் அடைக்கப்பட்டிருந்தன. பள்ளிகள், கல்லூரிகளுக்கு விடுமுறை அளிக்கப்பட்டிருந்தது; இணைய வசதிகள் துண்டிக்கப்பட்டன.

equitas SMALL FINANCE BANK LTD

எக்விடாஸ் ஸ்மால் ஃபைனான்ஸ் பேங்க் லிமிடெட்

பெருநிறுவன அலுவலகம்: எண்.769, ஸ்பென்சர் பிளாசா, 4வது தளம், பேஸ் II, அண்ணாசாலை, சென்னை, தமிழ்நாடு - 600002.

சுவாதீன அறிவிப்பு அசையா சொத்துக்கானது விதி 8 (1)

கீழே கையொப்பமிட்டுள்ளவர் எக்விடாஸ் ஸ்மால் ஃபைனான்ஸ் பேங்க் லிமிடெட்-ன் அதிகாரப்பூர்வ அலுவலராக இருக்கின்றபடியால் 2002ம் (54/2002) ஆண்டு கடனீட்டுச் சொத்துகளை ரொக்கமாக்குதல், நிதிச் சொத்துக்களைச் சீரமைத்தல் மற்றும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்கச்சட்டம் பிரிவு 13(12)ன் கீழும், அதற்குத் தொடர்புடைய 2002ம் ஆண்டு கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்க விதிகள் 3-ன் கீழும் தமக்குள்ள அதிகாரத்தைப் பயன்படுத்தி கீழ்க்காணும் கடன்தாரர்கள் கோரிக்கை அறிவிப்புகளை அனுப்பி அந்த அறிவிப்பு கிடைத்த 60 நாட்களுக்குள் அந்தந்த கோரிக்கை அறிவிப்புகளில் குறிப்பிட்டுள்ள செலுத்த வேண்டியுள்ள கடன் பாக்கிகளைச் செலுத்துமாறு கோரப்பட்டது. ஆனால், கடன்தாரர்கள் கீழ்குறிப்பிட்டுள்ள பாக்கி தொகையை முழுவதும் செலுத்த தவறிவிட்டதால் கடன்தாரர்கள் / ஜாமீன்தாரர்களுக்கு குறிப்பாகவும் பொதுமக்களுக்கு பொதுவாகவும் இதன் மூலம் அறிவிப்பது யாதெனில் மேற்படி 2002ம் ஆண்டு சட்டம் 13(4) மற்றும் அதற்குத் தொடர்புடைய மேற்படி விதி 8-ன் கீழ் தமது அதிகாரத்தைப் பயன்படுத்தி கீழே விவரிக்கப்பட்டுள்ள சொத்துக்களை அதிகாரப்பூர்வ அலுவலர் தமது சுவாதீனத்தில் எடுத்துக் கொண்டுள்ளார். எனவே முக்கியமாக கடன்தாரர்களுக்கும் பொதுமக்களுக்கும் இதன் மூலம் எச்சரிக்கப்படுவது யாதெனில், சுவாதீனமாகியுள்ள மேற்படி அடமான சொத்து விஷயத்தில் எவரும் எவ்வித பேரமோ / நடவடிக்கையோ வைத்துக் கொள்ள கூடாது. மீறி வைத்துக் கொண்டால் அது எக்விடாஸ் ஸ்மால் ஃபைனான்ஸ் பேங்க் லிமிடெட் கீழே குறிக்கப்பட்டவாறு தொகைகளுடன் நாளது தேதி வரையிலான வட்டியையும் சேர்த்து செலுத்துவதற்கு கட்டுப்பட்டதாகும். சட்டம் பிரிவு 13 துணை பிரிவு 8-ன் படி கடனீட்டு சொத்துக்களை மீட்டு கொள்வதற்கு கால அவகாசம் உள்ளது என்று கடன்தாரர்களின் கவனத்திற்கு கொண்டுவரப்படுகிறது.

வ. எண்	கடன்தாரர்கள் / ஜாமீன்தாரர்கள் பெயர்	கடனீட்டுச் சொத்துக்களின் விவரங்கள் (அசையா சொத்து / கள்)	
1.	கிளை: உத்திரமேரூர் LAN எண்: SEUTRUR0351667 கடன்தாரர்கள்: 1. திருமதி. சரஸ்வதி, (முகவரி எண்.140, கவன்தண்டலம்) 2. திரு. ஸ்ரீனிவாசன்	காஞ்சிபுரம் பதிவு மாவட்டம் மற்றும் வாலாஜாபாத் சார்பதிவு மாவட்டத்திற்குட்பட்ட, காஞ்சிபுரம் மாவட்டம், வாலாஜாபாத் வட்டம், கவன்தண்டலம் கிராமத்தின் கிராம நத்தம் பழைய சர்வே எண்.388/34, புதிய சர்வே எண்.744/27 இல் அமைந்துள்ள 1076ச.அடி விஸ்தீரணமுள்ள நிலம் மற்றும் கட்டிடம் அதனைச் சார்ந்த அனைத்து துண்டு மற்றும் பகுதி. எல்லைகள்: வடக்கில்: திரு. இராஜேந்திரன் அவர்களின் உரிமைப்பெற்ற மனை; தெற்கில்: திரு. சண்முக நாயக்கர் அவர்களின் உரிமைப்பெற்ற மனை; கிழக்கில்: தெரு; மேற்கில்: திரு. இராதாகிருஷ்ணன் அவர்களின் உரிமைப்பெற்ற மனை; நாற்பரப்புகள்: கிழக்கு மேற்காக வட புறம் – 47.2 அடி, தென் புறம்-43.9 அடி, வடக்குத் தெற்காக – கிழக்கு புறம் - 20.3 அடி, மேற்கு புறம் – 21.6 அடி, மொத்த விஸ்தீரணம் 1076ச.அடி.	
		கோரிக்கை அறிவிப்பு தேதி & தொகை	சுவாதீன தேதி
		06.05.2023 & ரூ.4,95,473/-	24.08.2023

தேதி: 29.08.2023
இடம்: காஞ்சிபுரம்

அதிகாரப்பூர்வ அலுவலர்,
எக்விடாஸ் ஸ்மால் ஃபைனான்ஸ் பேங்க் லிமிடெட்

ADITYA BIRLA CAPITAL PROTECTING INVESTING FINANCING ADVISING

ஆதித்யா பிர்லா ஃபைனான்ஸ் லிமிடெட்

பதிவு அலுவலகம்: இந்தியன் காம்பௌண்ட், வேராவால், குஜராத்-362266
கிளை அலுவலகம்: அறை எண் 401, 4வது தளம், கேமாக் சதுக்கம், 24, கேமாக் தெரு, கொல்கத்தா-700016

பிற்சேர்க்கை IV

(பார்க்க - விதி 9(1) பிணைச்சொத்து பாதுகாப்பு (அமலாக்கம்) விதிகள், 2002)

அசையா சொத்துகளின் விற்பனைகான விற்பனை அறிவிப்பு

பிணைக்காப்பு, நிதிச்சொத்து மறுசீரமைப்பு, பிணைச்சொத்து பாதுகாப்பு (அமலாக்கம்) சட்டம் '2002 - உடன் படிக்க - பிணைச்சொத்து பாதுகாப்பு (அமலாக்கம்) விதிகள்' 2002 ன் (2002 ம் வருடத்தின் 54 வது சட்டம்) விதி விதி 9(1)க்கான விதி விலக்கு - ன் கீழ் அசையா சொத்துக்கள் விற்பனைக்கான மின்னணு ஏல விற்பனை அறிவிப்பு

இதன் மூலம் பொது மக்களுக்கும், குறிப்பாக கடன்தாரர்(கள்) மற்றும் ஜாமீன்தாரர்(களுக்கும்) அறிவிக்கப்படுவது யாதெனில், அவரவர் கடனுக்கான நிலுவைகளுக்கான ஜாமீனாக, ஜாமீன் பெற்று கடனளித்தவருக்கு அடமானம் ஏற்படுத்தப்பட்டு, ஜாமீன் பெற்று கடனளித்த, ஆதித்யா பிர்லா ஃபைனான்ஸ் லிமிடெட்-ன் அதிகாரப்பூர்வ அலுவலரால், இயற்பவதினம் (Physical Possession) எடுக்கப்பட்ட இதன் கீழ் விவரிக்கப்பட்ட அசையா சொத்துக்கள், TJL லிமிடெட் (கடன்தாரர்) (அதன் இயக்குனர்கள் மூலம்) யிடமிருந்து ஜாமீன் பெற்று கடனளித்தவருக்கு 31.05.2022ம் தேதியின் படி வர வேண்டிய நிலுவைத்தொகை ரூ. 6,39,44,852.46/- (ரூபாய் ஆறு கோடியே முப்பத்து ஒன்பது இலட்சத்து நாற்பத்து நான்காயிரத்து எட்நூற்று ஐம்பத்து இரண்டு மற்றும் பைசா நாற்பத்து ஆறு மட்டும்) மற்றும் பணமாக்கப்படும் வரை வரும் பொருந்தத்தக்க விதத்தில் அன்றாடம் சேர்ந்து வரும் வட்டி மற்றும் கட்டணங்கள் போன்றவற்றை வசூலிப்பதற்காக ''இருக்கின்ற இடத்தில்'' மற்றும் ''இருக்கின்ற நிலையில்'' மற்றும் ''இருக்கின்றவற்றுடன்'' என்ற அடிப்படையில் 20.09.2023 அன்று விற்பனை செய்யப்படும்.

அடிப்படை விலை ரூ. 4,80,00,905/- (ரூபாய் நான்கு கோடியே எண்பது லட்சத்து தொள்ளாயிரத்து ஐந்து ரூபாய் மட்டும்), மற்றும் டேவணித்தொகை ரூ. 48,00,009.5/- (ரூபாய் நாற்பத்தெட்டு லட்சத்து ஒன்பது மற்றும் பைசா ஐந்து மட்டும்) ஆகும்.

அசையா சொத்து விபரம்

மத்திய சென்னை பதிவு மாவட்டம், தென் சென்னை சார் பதிவு மாவட்டம், நுங்கம்பாக்கம் நெடுஞ்சாலை, நுங்கம்பாக்கம் கிராமம், (மாநகராட்சி எல்லைக்குட்பட்ட) R.S.எண். 156/2 ல் உள்ள 9 கிரவுண்டு 1600 சதுர அடி பரப்பளவு கொண்ட ப்ளாட் எண். 22, கதவு எண். 1A ல் அமையப்பெற்ற ''ஜாவீர் ப்ளாசா'' என அழைக்கப்படும் பல அடுக்கு கட்டிடத்தின் ஏழாவது தளத்தில் உள்ள 6125 சதுர அடி கட்டிட மேற்பரப்பு கொண்ட எண். 1-5 என்ற அலுவலக இடம் (இது கள பரப்பு, சுவர் மற்றும் சேவை பரப்புகளில் உள்ள விகிதாச்சார பங்குகள் ஆகியவற்றை உள்ளடக்கியது) மற்றும் 1951 சதுர அடி பிரிபடாத பங்கு மற்றும் அவற்றுடன் கூடிய சகல உரிமைகள் மற்றும் உடைமைகள் முழுவதும். இவ்விடத்தின் எல்லைகளாவன:
திரு அருணாச்சலத்துக்கு சொந்தமான சைட்டுக்கு - வடக்கு,
கோடம்பாக்கம் நெடுஞ்சாலைக்கு - தெற்கு,
நுங்கம்பாக்கம் நெடுஞ்சாலைக்கு - கிழக்கு,
S படேல் & பிறருக்கு சொந்தமான ப்ளாட்டுக்கு - மேற்கு.

விற்பனைக்கான விரிவான விதிகள் மற்றும் நிபந்தனைகளுக்கு, தயவு கூர்ந்து ஆதித்யா பிர்லா ஃபைனான்ஸ் லிமிடெட்-ன் வலைதள தொடர்பு i.e. https://mortgagefinance.adityabirlacapital.com/Pages/Individual/Properties-for-Auction-under-SARFAESI-Act.aspx அல்லது https://sarfaesi.auctiontiger.net யை பார்வையிடவும்.

ஒப்பம்/-
அதிகாரப்பூர்வ அலுவலர்
ஆதித்யா பிர்லா ஃபைனான்ஸ் லிமிடெட்
திரு.சுபம் சிங் - 9503198114

தேதி : 29.08.2023
இடம் : சென்னை & கொல்கத்தா

இண்டியன் பேங்க் இந்தியன் வங்கி | இலாஹாபாத் அலகாபாத்

அண்ணா நகர் கிளை
எண்.143, Y பிளாக் 3வது தெரு, அண்ணா நகர், சென்னை - 600 040. தொலைபேசி : 044-26213300/3174, மின்னஞ்சல் : annanagarchennai@indianbank.co.in

சுவாதீன அறிவிப்பு (அசையா சொத்துக்களுக்கு)

கீழே கையொப்பமிட்டுள்ள இந்தியன் வங்கியின் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி அவர்கள், 2002-ம் ஆண்டு கடனீட்டுச் சொத்துக்களை ரொக்கமாக்குதல் மற்றும் நிதி சொத்துக்களை சீரமைத்தல் மற்றும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்கச் சட்டத்தின் கீழும், மேற்சொன்ன சட்டத்தின் 13(12)வது பிரிவின் கீழ் வழங்கப்பட்ட அதிகாரத்தின் கீழும், 2002-ம் ஆண்டு கடனீட்டுச் சொத்துக்கள் மீதான உரிமை அமலாக்க விதி 8 மற்றும் 9-க்கு ஏற்ப எங்கள் அண்ணா நகர் கிளையின் கடன்தாரர் : **(1) M/s. முத்தாரம்மன் ஐயர்ன் அண்டு ஸ்டீல், (கடன்தாரர்)**, எண்.49/1C, பூந்தமல்லி புறவழிச்சாலை, சென்னை - 600 056, **மேலும் இருப்பது :** கன்னடபாளையம் ரோடு, குத்தம்பாக்கம் கிராமம், திருவள்ளூர் - 602 107, **மேலும் இருப்பது :** எண்.54, GVT காம்ப்ளெக்ஸ், நசரத்பேட்டை, சென்னை பெங்களூரு நெடுஞ்சாலை, சென்னை - 602 105, **(2) திருமதி. N. சண்முகா தேவி, (உரிமையாளர்)**, எண்.67, 9வது தெரு, காமராஜ் நகர், ஆவடி, சென்னை - 600 071, **(3) திரு. P. சிவகுமார், (அடமானதாரர் & ஜாமீன்தாரர்)**, 5/240, நாகாத்தம்மன் நகர், நெமிலிச்சேரி, திருநின்றவூர், தமிழ்நாடு - 602 204, ஆகியோருக்கு **24.04.2023** தேதியிட்ட கோரிக்கை அறிவிப்பு அனுப்பி, அதில் குறிப்பிட்டுள்ளபடி செலுத்த வேண்டிய தொகையான **ரூ.3,65,98,232/- (ரூபாய் மூன்று கோடியே அறுபத்து ஐந்து லட்சத்து தொண்ணூற்று எட்டாயிரத்து இருநூற்று முப்பத்து இரண்டு மட்டும்)** மேற்சொன்ன அறிவிப்பு கிடைத்த 60 நாட்களுக்குள் தொகையை திரும்ப செலுத்துமாறு கேட்டுக் கொண்டிருந்தார்.

சம்பந்தப்பட்ட கடன்தாரர் மேற்சொன்ன தொகையை திரும்பச் செலுத்த தவறியதால் கடன்தாரர் மற்றும் பொதுமக்களுக்கு பொதுவாக அறிவிக்கப்படுவது என்னவெனில் கீழ்க்குறிப்பிட்டுள்ள சொத்துக்களை மேற்சொன்ன சட்டத்தின் 13(4) பிரிவின் கீழ் கொடுக்கப்பட்டுள்ள அதிகாரத்தின்படியும், மேற்சொன்ன விதிமுறைகளின் விதி 8 மற்றும் 9-க்கு இணங்கவும், **23 ஆகஸ்டு 2023** அன்று கீழே கையொப்பமிட்டுள்ள அதிகாரி சுவாதீனம் எடுத்துக் கொண்டுள்ளார்.

கடன்தாரருக்கு குறிப்பாகவும் மற்றும் பொதுமக்களுக்கு பொதுவாகவும் எச்சரிக்கப்படுவது யாதெனில், சுவாதீனம் எடுத்துக்கொண்ட இந்த சொத்து இந்தியன் வங்கிக்கு செலுத்த வேண்டிய தொகையான **ரூ.3,65,98,232/- (ரூபாய் மூன்று கோடியே அறுபத்து ஐந்து லட்சத்து தொண்ணூற்று எட்டாயிரத்து இருநூற்று முப்பத்து இரண்டு மட்டும்)** மற்றும் வட்டியுடன் சேர்ந்து பிணையமாக உள்ளது என்பதால், யாரும் மேற்படி சொத்து தொடர்பாக எந்தவித நடவடிக்கைகளும் மற்றும் தொடர்புகளையும் வைத்துக்கொள்ள கூடாது அப்படி வைத்துக்கொண்டால் அது இந்தியன் வங்கிக்கு செலுத்த வேண்டிய பிணைய தொகைக்கு உட்பட்டது என்று இதன் மூலம் அறிவிக்கப்படுகிறது.

"SARFAESI சட்டம் பிரிவு 13(8) ஷரத்துகளின் கீழ் அமைக்கப்பட்ட விதிகளின்படி சொத்துக்களை மீட்டுக்கொள்ள உங்களுக்கு உள்ள உரிமையை கவனத்தில் கொள்ளவும்".

அசையா சொத்தின் விவரம்

பிணையமாக அளிக்கப்பட்டுள்ள அடமான சொத்தின் முக்கிய விபரங்கள் பின்வருமாறு : **அடமான சொத்துக்கள் : 1.** திருநின்றவூர் கிராமம், பூந்தமல்லி தாலுகா, திருவள்ளூர் மாவட்டத்தில் உள்ள காலி நிலத்தின் அனைத்து துண்டுகளும் பகுதிகளும், இதன் மனை எண்.77, PPD/LO எண்.116/85-ன்படி அங்கீகரிக்கப்பட்ட பிரகாஷ் நகரில் உள்ளது. சர்வே எண்.16/9, பட்டா எண்.16/89-ன்படி பட்டா 2742-ல் அடங்கியுள்ளது. 2400 சதுர அடி பரப்பளவு கொண்டது. இது ஆவடி துணை பதிவு மாவட்டம் மற்றும் சென்னை தெற்கு பதிவு மாவட்டத்திற்குள் அமைந்துள்ளது. எல்லைகள் - வடக்கில் : மனை எண்.73, தெற்கில் : 30 அடி ரோடு, கிழக்கில் : மனை எண்.76, மேற்கில் : மனை எண்.78.

2. கெங்கு ரெட்டி குப்பம், திருநின்றவூர், திருவள்ளூர் மாவட்டத்தில் உள்ள காலி நிலத்தின் அனைத்து துண்டுகளும் பகுதிகளும். இதன் மனை எண்.19, MMDA-வால் அங்கீகரிக்கப்பட்ட தளவமைப்பு PPD/LO எண்.94/91. சர்வே எண்.17/3, பட்டா எண். 5705, பட்டாவின்படி சர்வே எண்.17/3A1B-ல் அடங்கியுள்ளது. இது ஆவடி துணை பதிவு மாவட்டம் மற்றும் சென்னை தெற்கு பதிவு மாவட்டத்திற்குள் அமைந்துள்ளது. எல்லைகள் - வடக்கில் : சர்வே எண்.7/7, தெற்கில் : 30 அடி ரோடு, கிழக்கில் : 24 அடி ரோடு, மேற்கில் : மனை எண்.20.

3. எண்.3, பருத்திப்பட்டு கிராமம், ஆவடி நகராட்சி, பூந்தமல்லி தாலுகா, திருவள்ளூர் மாவட்டத்தில் உள்ள நிலம் மற்றும் கட்டிடத்தின் அனைத்து துண்டுகளும் பகுதிகளும், இதன் மனை எண்.305, சர்வே எண்.713/1B1 பகுதி, LIG-II வகை 915 சதுர அடி பரப்பளவு கொண்டது/நிலம் மற்றும் R C C கட்டிடம், EB இணைப்புடன் TNHB-ல் வைப்பு உட்பட இது ஆவடி துணை பதிவு மாவட்டம் மற்றும் சென்னை தெற்கு பதிவு மாவட்டத்திற்குள் அமைந்துள்ளது எல்லைகள் - வடக்கில் : மனை எண்.1/306, தெற்கில் : மனை எண்.1/304, கிழக்கில் : மனை எண்.1/427, மேற்கில் : 20 அடி ரோடு.

தேதி : 23.08.2023
இடம் : சென்னை

அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி,
இந்தியன் வங்கி.

கடன் மீட்பு தீர்ப்பாயம்–III

4வது தளம், கூடுதல் அலுவலக கட்டிடம், சாஸ்திரி பவன், ஹாடோஸ் சாலை, நுங்கம்பாக்கம், சென்னை - 600 006

TRC எண். 413 /2023 — தேதி: 23.08.2023

மின்னணு ஏல விற்பனை

OA எண்:351/2007 சம்மந்தப்பட்ட **M/s. கியான் லெதர் போர்டு லிமிடெட். மற்றும் மற்றவர்கள்** - எதிர் ஐடிபிஐ பேங்க் லிமிடெட்க்கு செலுத்தவேண்டிய தொகை 31/07/2023 வரை **ரூ.122,53,45,812/-** (ரூபாய் நூற்று இருபத்தி இரண்டு கோடி ஐம்பத்து மூன்று இலட்சத்து நாற்பத்து ஐந்தாயிரத்து எண்ணூற்று பன்னிரெண்டு மட்டும்)-க்காக கீழ்கண்ட சொத்து மின்னணு ஏலம் **https://bankeauctions.com** இணையதளத்தில் ஆன்லைன் மூலம் விற்கப்பட உள்ளது.

சொத்து விவரம்: 241/1B, 241/2, 241/3B, 241/4/1, 241/4/1A, 241/4/1B, 244(part), 245/2 and 296/1/2 மற்றும் மறுஆய்வு 119/1, 119/2, 119/3, 122/6 (part) and 122/7, அளவீடுகள் மூலம் 7 ஏக்கர் 15 சென்ட், துத்திப்பேட்டை, வில்லியனூர் கம்யூன், வில்லியனூர் துணைப் பதிவு மாவட்டம், பாண்டிச்சேரி யூனியன் பிரதேசத்தில் அமைந்துள்ள பிரதான சாலையிலிருந்து 20 அடி அகலம் கொண்ட பொதுவான அணுகுமுறைச் சாலையுடன், மறு ஆய்வு எண் 122 வழியாகச் செல்கிறது. அங்குள்ள அனைத்து கட்டிடங்கள் மற்றும் கட்டமைப்புகள் மற்றும் அனைத்து ஆலை மற்றும் இயந்திரங்கள் பூமியுடன் இணைக்கப்பட்டுள்ளன அல்லது நிரந்தரமாக பூமியுடன் இணைக்கப்பட்ட எந்தவொரு பொருளுடனும் இணைக்கப்பட்டுள்ளன.

நிர்ணயிக்கப்பட்ட விலை	:	ரூ.10,00,00,000/- (பத்து கோடி ரூபாய் மட்டுமே
மின்னணு ஏல தேதி மற்றும் நேரம்	:	05.10.2023 அன்று காலை 11.00 மணி முதல் பிற்பகல் 12.00 மணிக்கிடையில் விற்பனை முடிவு வரை ஒவ்வொரு 3 நிமிடத்திற்கும் தானியங்கி கால நீட்டிப்பு அளிக்கப்படும்
டேவணித் தொகை	:	நிர்ணயிக்கப்பட்ட விலையில் 10%
டேவணித் தொகை மற்றும் ஏலப் படிவத்தை செலுத்த கடைசி நாள்	:	03.10.2023 அன்று அல்லது அதற்கு முன்னதாக The Recovery Officer, DRT-3, Chennai" என்ற பெயரில் நடப்பு கணக்கு எண்: 163302000000200 இந்தியன் ஓவர்சீஸ் வங்கி, கத்தீட்ரல் ரோடு கிளை, சென்னை-2, IFSC Code: IOBA0000109க்கு EFT/NEFT/RTGS மூலமாக செலுத்த வேண்டும்
ஏல மடங்குப் பெருக்கம்	:	குறைந்தபட்சம் ரூ.10,00,000/-
சொத்தை பார்வையிடும் தேதி	:	22.09.2023 காலை 11 மணி முதல் மதியம் 3 மணி வரை

எந்த ஒரு சூழ்நிலையிலும் தீர்ப்பாயத்தில் ஒப்பந்தப்புள்ளி படிவத்தை நேரடியாக ஏற்றுகொள்ள முடியாது மற்றும் எந்த ஒரு விசாரணையையும் தீர்ப்பாயம் ஏற்காது.

மேற்கண்ட ஏலம் பற்றிய மற்ற விவரங்கள் அறிய மற்றும் மின்னணு ஏல ஒப்பப்படிவம் மற்றும் முடிவு அறிவித்தல் படிவம் மற்றும் விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளுக்கு இணையதளமான https://bankeauctions.com. பார்க்கவும்.

மேலும் விவரங்கள் ஏதேனும் தேவைப்பட்டால் **ஐடிபிஐ வங்கி லிமிடெட், எண் : 115, அண்ணாசாலை, சைதாப்பேட்டை, சென்னை - 600015. (திரு. டி. ஆர். ஜே. கண்ணன் பாபு அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி. மின்னஞ்சல் ; kannan_babu@idbi.co.in (தொடர்பு எண்கள். 044 - 22202152, 8903642095)** தொடர்பு கொள்ளலாம்.

(ரமேஷ் மன்னார்)
வசூலிப்பு அதிகாரி

பொது அறிவிப்பு

ICICI Bank | கிளை அலுவலகம்: ICICI வங்கி லிமிடெட், 4/10, மைத்ரீ டவர், பொம்மனஹள்ளி ஒசூர் பிரதான சாலை, பெங்களூரு-560068.

பின்வரும் கடன்தாரர்/கள் இந்த வங்கியிடம் இருந்து பெற்ற கடன் வசதியின் அசல் மற்றும் வட்டியை திரும்ப செலுத்த தவறிவிட்டபடியால், அந்தக்கடன்கள் செயல்படாத சொத்துகள் (NPA) என பகுக்கப்பட்டுள்ளன. கடனீட்டுச் சொத்துகளை ரொக்கமாக்குதல், நிதிச் சொத்துகளைச் சீரமைத்தல் மற்றும் கடனீட்டுச் சொத்துகள் மீதான உரிமை அமலாக்கச் சட்டம்-2002-இன் பிரிவு 13(2)-இன் கீழ் அவர்களுக்கு கடைசியாக அறியப்பட்ட அவர்களது முகவரிகளுக்கு ஓர் அறிவிப்பு அனுப்பப்பட்டது. ஆனால் அது பட்டுவாடா ஆகவில்லை. மேலும் எனவே, இந்த பொது அறிவிப்பு மூலம் அவர்களுக்கு இங்கே அறிவிக்கப்படுகிறது.

வ. எண்	கடன்தாரர் / கூட்டு-கடன்தாரர் / ஜாமீன்தாரர் பெயர் / (கடன் கணக்கு எண்) & முகவரி	கடனீட்டு சொத்தின் சொத்து முகவரி	அறிவிப்பு அனுப்பப்பட்ட நாள் / அறிவிப்பு நாளப்படியான நிலுவைத்தொகை	செயல்படாத சொத்து (NPA) நாள்
1.	மிலன் குமார் / பிங்கீ தேவி / 0 நாகல மான்சா கிராமம் அஞ்சல், பட்லோனி, மதுரா, மதுரா, உத்தர பிரதேசம், மதுரா- 281301 / LBMAT00005685531	வீடு கட்டுமானம் அமைவிடம் ப்ளாட் எண் C-26, கஸ்ரா எண்.48, மௌஜா அஜம்பூர், துர்கா என்கிளேவ் காலனி, மதுரா தாலுக்கா & மாவட்டம், அந்த்ரூன் உத்தரப்பிரதேசம் மதுரா-281001	03/05/2023 ரூ. 19,55,235/-	02/02/2023

அறிவிப்புக்கான மாற்று சேவைக்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. மேற்கண்ட கடன்தாரர்(கள்) மற்றும் அல்லது அவர்களது ஜாமீன்தாரர்கள் (பொருந்தும் எனில்) இந்த அறிவிப்பு நாளில் இருந்து 60 நாட்களுக்குள் நிலுவைக்கான தொகையை செலுத்துமாறு அறிவுறுத்தப்படுகிறார்கள். இல்லையெனில், கடனீட்டுச் சொத்துகளை ரொக்கமாக்குதல், நிதிச் சொத்துகளைச் சீரமைத்தல் மற்றும் கடனீட்டுச் சொத்துகள் மீதான உரிமை அமலாக்கச் சட்டம்-2002-இன் விதிமுறைகளின்படி மேல் நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

நாள்: ஆகஸ்ட் 29, 2023
இடம் : சென்னை

அதிகாரப்பூர்வ அலுவலர்
ICICI வங்கி லிமிடெட்